மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : CC 667 /2022

பெயர் : வீரமணிகண்டன்(PW1)

த/பெ. : அரியநாயகம் ஆசாரி

(A1 Manikandan A2 Murugan, A3 Selvakumar, A4 Thatchanamoorthy are present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of August 2024

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** ( மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை)( சாட்சிக்கு அவரது முதல் விசாரணை படித்துக் காண்பிக்கப்பட்டது)

1) சம்பவம் நடந்த அன்று மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு நான் சென்றபோது மருத்துவரிடம் என்னை இனம் தெரிந்த 2 பெண்கள், 13 ஆண்நபர்கள் கம்பு மற்றும் கம்பி செங்கல் ஆகியவற்றால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் மருத்துவமனையில் இருந்தபோது கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் கண்ணில் மிளகாய் பொடியை போட்டதை நான் சொல்லவில்லை என்றாலும்போலிசார் விசாரணையிலும் சொல்ல வில்லை என்றாலும் சரியல்ல.

3) எனது ஊர் மேலஅரசடியில் இருந்து தூத்துக்குடி வருவதற்கு சுமார் 20 நிமிடங்கள் ஆகும் . திருமணம் முடிந்த பின்னர் எனக்கும் என் மனைவிக்கும் அடிக்கடி பிரச்சனை வரும். பிரச்சனைக்கு காரணம் நான் தினந்தோறும் மது அருந்துவது தான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளின் காலையில் நானும் என் அப்பாவும் எதிரிகள் வீட்டிற்கு சென்றோம் என்றால் இல்லை ,

4) என்னிடம் இருசக்கர வாகனம் கிடையாது. சம்பவத்தன்று நானும் என் அப்பாவும் எதிரிகள் வீட்டிற்கு சென்று அங்கு என் மனைவிக்கும் 2வது எதிரிக்கும் எந்த பிரச்சனையும் நடைபெறவில்லை என்றால் சரிதான்.

5) என்னுடைய புகார் வாக்குமூலத்தில் நானும் என் அப்பாவும் குறிஞ்சி நகரில் உள்ள என் மனைவியின் வீட்டிற்கு சென்ற போது என் மனைவி என்னுடன் வரமறுத்தார் என்றும் அவருக்கும் 2வது மற்றும் 3வது எதிரிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.அங்கு வைத்து கைகலப்பு ஏற்பட்டது என்று நான் புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

6) எனது முதல் விசாரணையில் நான் வீட்டிற்குள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது எதிரிகள் வந்து தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்,. எனது

முதல் விசாரணையில் எதிரிகள் குட்டியானை வாகனத்தில் வந்ததாக சொல்லியுள்ளேன் ஆனால் புகார்வாக்குமூலத்திலோ போலிசார் விசாரணையிலோ சொல்ல வில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

7) எனது புகார் வாக்குமூலத்தில் 2 வது எதிரி என்னை கல்லை வைத்து அடித்ததாக சொல்லியுள்ளேன் ஆனால் போலிசார் விசாரணையில் 2 வது எதிரி என்னை கல்லை வைத்து அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.சம்பவத்தன்று நானும் என் அப்பாவும் எதிரிகள் வீட்டிற்கு சென்று கைகலப்பு ஏற்பட்டதால் அவர்கள் என் மீது புகார் கொடுத்து விடுவார்கள் என்று பயந்து இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்து காயம்பட்டதை பயன்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல .சம்பவம் உண்மையில்லாததால் தான் காலதாமதமாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் என்னை தாக்கவும் இல்லை கெட்ட வார்த்தைகளால் பேசவும் இல்லை என்றாலும் காயப்படுத்தவில்லை என்றாலும் மிரட்டவில்லை என்றாலும் சரியல்ல.எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.